සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு
Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/DG/பொது | ඔබේ අංකය / உமது இல / Your No: ........ | දිනය / திகதி / Date: 2020.03.30

மாவட்டச் செயலாளர்/சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,
பிரதேச செயலாளர்,
சமுர்த்தி பிரதி பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் சங்க மற்றும் வங்கி முகாமையாளர்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் சங்க மற்றும் வங்கி தலைவர்

**சமுர்த்தி நிவாரணம் பணத்தை களத்திலேயே செலுத்துதல்**

கொரோனா வைரஸ் COVID-19 இலங்கையிலிருந்து ஒழிக்கும் பொருட்டு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகளுக்மைய சுகாதார பாதுகாப்பான முறைகளைப் பின்பற்றி சமுர்த்தி நிவாரணப் பணத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக களத்தில் தாமதமின்றி செலுத்தப்பட வேணுடியதுடன் அதற்குரியதான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இதன் மூலம் வழங்கப்படுகின்றது.

02. சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு நிதியை விடுவித்தல்

சமுதாய அடிப்படை அமைப்பு மட்டத்தில் சமுர்த்தி நிவாரண பெயர்பட்டியலைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். இங்கு சமனான நிதிப் பெறுமதிக்கமைய பட்டியலைத் தயாரித்து மொத்தப் பெறுமதியினை கணக்கீடு செய்து பொதுப்பேரேட்டில் குறித்த சேமிப்பு வைப்புக் கணக்கில் பற்றின் நிமிர்த்தம் எழுதப்பட்ட "காசுப்பற்று" ப் படிவம் ஒன்றினைப் பதிவு செய்து குறித்த பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பணத்தைப் பொறுப்பேற்றதாக கையொப்பத்தினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்த நடவடிக்கைகளின் போது குறித்த சமுதாய அடிப்படை அமைப்பின் மக்கள் பிரதிநிதி ஒருவருடனும் தொடர்புபடுத்திக் கொள்வது மிகப் பொருத்தமானதாக அமையும். ஒரு தடவையில் உயர்ந்தபட்சமானது ரூபா மூன்று இலட்சத்திற்கு உட்பட்டதாக (ரூபா. 300000.00) நாள் ஒன்றுக்குத் தேவையான தொகையினை பல தடவைகளிலும் கூட எடுத்துச் செல்ல முடியும். வழியில் பணத்தை எடுத்துச் செல்வதற்கான காப்பீடும் இதன் பொருட்டு உரித்துடையதாகும்.

03. சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு களத்தில் பணத்தை செலுத்துதல்.

சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கைக்கேற்ப "சேமிப்பு கணக்கிலிருந்து பணத்தை மீள எடுத்தல் “பற்றுத் தாளினை" (வவுச்சர்) எடுத்துக் கொண்டு போய் நிவாரணம் பெறுபவர் ஊடாக பூர்த்தி செய்து பணம் கிடைத்தாக கையொப்பத்தினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதனோடு இணைந்ததாக பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தரிடம் வைத்துக் கொள்வதற்காக கொடுப்பனவு செய்கின்ற நிவாரணத் தொகைக் குரியதாக நிதியைப் பொறுப்பேற்றதாக பட்டியல் ஒன்றினையும் தயாரித்து கையொப்பத்தினைப் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

04. எஞ்சிய தொகையினை வங்கியில் மீளத்தீர்ப்பதும் வவுச்சர்களை ஒப்படைப்பதும்.

களத்தில் நிவாரணப்பணத்தினை செலுத்தியதன் பின்னர் ஏதேனும் ஒரு தொகை நிலுவையாக இருந்தால் அத் தொகையினை மேற்படி பட்டியலில் குறிப்பிட்டு உரிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மக்கள் பிரதிநிதியின் பெயர் கையொப்பம் என்பவற்றுடன் சமுர்த்தி வங்கியில் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு நிலுவைத்தொகையினை ஒப்படைக்கும் போது பொதுப்பேரேட்டில் உரிய வைப்புக் கணக்கில் வரவின் பொருட்டு எழுதப்பட்டு "காசு வரவுத்தாள்" ஒன்றினை பூர்த்தி செய்தல் வேண்டு. பின்னர் "சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை மீளப் பெறல் பற்றுத்தாள் மற்றும் நிலுவையான பணம் என்பனவற்றினை வங்கி முகாமையாளரால் பொறுப்பேற்றதாக குறித்த ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும். இறுதியாக, “சேமிப்பு கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெறுதல் பற்றுத்தாளை” அடிப்படையாகக் கொண்டு தனிநபர் கணக்குகளில் மாத்திரம் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

ஒப்பம்

ஆர்.பி.பீ. திலக்கசிரி,
பணிப்பாளர் தலைமையதிபதி

Translated by:- M.M.M.Jawhar (Translator)

பிரதிகள் –

1. செயலாளர், மகளிர்,சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
3. கணக்காளர் நாயகம், கணக்காளர் நாயகத் திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
4. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு